இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வெள்ளிக்கிழமை 27-10-2023

# தி.மு.க.வும் விடுதலைப் போராட்ட வீரர்களும் 1

விடுதலைப் போராட்ட வீரர்களை திராவிட இயக்கம் கொண்டாடவில்லை என்பது போன்ற பொய்ப் பிரச்சாரத்தைத் தொடங்கி இருக்கிறார் கிண்டி மாளிகை ஆளுநர் ஆர்.என்.ரவி.

இவருக்கு திராவிட முன்னேற்றக் கழகம் பற்றியும் தெரியாது. விடுதலைப் போராட்டம் பற்றியும் தெரியாது. தமிழ்நாடு பா.ஜ.க.வின் தலைவராக தன்னை நினைத்துக் கொண்டு நித்தமும் செயல்பட்டுக் கொண்டு இருக்கிறார் ஆர்.என்.ரவி.

கடந்த ஆண்டு இந்தியக் குடியரசு தின அணிவகுப்பில் இடம் பெறுவதற்காக தமிழ்நாடு அரசின் சார்பில் அனுப்பி வைக்கப்பட்ட ஊர்தியை பா.ஜ.க. அரசு மறுத்தது. இந்திய விடுதலை வேள்விக்காக விறகு சுமந்த மருது சகோதரர்களும், இராணி வேலு நாச்சியாரும், கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி.யும், மகாகவி பாரதியாரும்தான் அதில் இடம் பெற்றிருந்தார்களே தவிர, விடுதலைப் போராட்டத்துக்குத் தொடர்பில்லாத யாரும் இடம் பெறவில்லை. ‘இவர்கள் யார்?’ என்று அன்று அதிகாரிகள் கேட்டதாக டெல்லியில் இருந்து வெளியாகும் ஆங்கில நாளிதழ்களே செய்திகள் வெளியிட்டன. “இவ்விஷயத்தில் பிரதமர் உடனடியாகத் தலையிட்டு, விடுதலைப் போராட்ட வரலாற்றில் தமிழ்நாட்டின் பங்களிப்பு இடம்பெறுவதை உறுதிசெய்ய வேண்டும்” என்று முதல்வர் ஸ்டாலின் குறிப்பிட்டார். “தமிழ்நாடு அலங்கார ஊர்தி தொடர்பாக, மாநில அதிகாரிகள் 3 முறை குழுவிடம் நேரில் சென்று விளக்கம் அளித்தனர். திருத்தங்கள் செய்து தரப்பட்ட 7 மாதிரிகளையும் ஒன்றிய அரசின் குழுவினர் மறுத்ததை ஏற்க முடியவில்லை. அதுவும் 4வது சுற்று கூட்டத்திற்கு தமிழக அதிகாரிகளை அழைக்காமலேயே குடியரசு தின அணிவகுப்புப் பட்டியலிலிருந்து பெயரை நீக்கியிருப்பது வேதனை தருகிறது” எனக் குறிப்பிட்டு இருந்தார். அப்போதும் அனுமதிக்கவில்லை.

**இந்த நிலையில் முதலமைச்சர் அவர்கள் இரண்டு முக்கியமான முடிவுகளை எடுத்தார். இந்திய குடியரசு தின விழாவில் பங்கேற்கும் மாநிலங்களின் அலங்கார ஊர்திகள் அணிவகுப்பில் தமிழ்நாடு முன்மொழிந்த சுதந்திரப் போராட்டத் தியாகிகளின் உருவ மாதிரிகளை இந்திய பாதுகாப்புத் துறையின் உயர்நிலைக்குழு கவனத்தில் கொள்ளாத நிலையில், அந்தத் தலைவர்களின் விடுதலை வேட்கையைப் பறைசாற்றும் அலங்கார ஊர்தி தமிழகத்தில் நடைபெறும் குடியரசு தின அணிவகுப்பு விழாவில் இடம்பெறும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்தார்கள். இந்த அலங்கார ஊர்தி தமிழகத்தின் பிற பகுதிகளுக்கும் மக்களின் பார்வைக்காக அனுப்பி வைக்கப்படும் என்றும் கூறியிருந்தார். அதன்படி தமிழ்நாடு முழுவதும் இந்த ஊர்தி கடந்த ஆண்டில் வலம் வந்தது. அனைத்து ஊர்களிலும் சுதந்திரப் போராட்டத்தில் தமிழகத்தின் பங்கை எழுச்சியுடன் பறை சாற்றுவதற்கான களம் தமிழ்நாட்டில் அமைந்தது.**

இந்த ஆண்டுக்காக குடியரசு தின அணிவகுப்பில் அருந்தமிழ் ஔவை மூதாட்டி, வீரமங்கை வேலுநாச்சியார், சமூகச் சீர்திருத்த திராவிடத் தாய் மூவலூர் மூதாட்டி இராமாமிர்தம், சமூகச் சீர்திருத்த முதல் மருத்துவர் முத்து லட்சுமி, இசையரசி எம்.எஸ்.சுப்புலட்சுமி, நாட்டியக் கலைஞர் பால சரசுவதி, இன்றும் வாழும் இயற்கை விவசாயியான பாப்பம்மாள் - ஆகிய ஏழு முகங்களை தமிழ்நாட்டின் முகங்களாக எடுத்துக் காட்டியது தமிழ்நாடு. இவை எல்லாம் ஆளுநருக்குத் தெரியுமா?

நாட்டுப் பற்றில் திராவிட முன்னேற்றக் கழகம் எப்போதும் உறுதியாக இருந்து வந்துள்ளது.

★ **சீன நாட்டால் இந்தியாவுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்ட போது 1962 ஆம் ஆண்டு, திராவிட நாடு கோரிக்கையைக் கைவிட்டு, இந்திய நாட்டின் பாதுகாப்பே முக்கியம் என்று அறிவித்தவர் பேரறிஞர் அண்ணா அவர்கள்.**

★ **1971ஆம் ஆண்டு இந்தியாவைப் பாகிஸ்தான் அச்சுறுத்தியபோது, தமிழ்நாடு சட்டமன்றத்தில் பாகிஸ்தான் படையெடுப்பு கண்டனத் தீர்மானம் போட்டவர் முதல்வர் கலைஞர் அவர்கள்.**

★ **1972 ஆம் ஆண்டு பாகிஸ்தான் போரின் போது அன்றைய பிரதமர் இந்திரா காந்தி அவர்களிடம் நாட்டுப் பாதுகாப்புக்காக ஆறுகோடி ரூபாய் நிதி வழங்கியவர் முதல்வர் கலைஞர் அவர்கள். அன்றைய தினம் அனைத்து மாநிலங்களும் வழங்கிய தொகை மொத்தம் 25 கோடி. அதில் 6 கோடியை வழங்கியது தி.மு.க. அரசு.**

★ **அந்தப் போரில் வீரமரணம் அடைந்த ராணுவ வீரர்களுக்கு நிதியும் நிலமும் வழங்கிய அரசு, கலைஞரின் அரசு.**

★ **1999ஆம் ஆண்டு கார்கில் போரின் போது அன்றைய பிரதமர் வாஜ்பாய் அவர்களிடம் மூன்று தவணைகளாக மொத்தம் 50 கோடி ரூபாய் வழங்கிய அரசு, முதல்வர் கலைஞரின் அரசு.**

**எனவே நாட்டுப்பற்றை புதிதாக இங்கு வந்து யாரும் எங்களுக்குப் போதிக்கத் தேவையில்லை.**

★ **வீரபாண்டிய கட்டபொம்மனுக்கு இன்று கோட்டை அமைந்திருக்கிறது என்றால், அதனை அமைத்தவர் முதல்வர் கலைஞர். கட்டபொம்மன் பிறந்தநாளை ஆண்டுதோறும் அரசு விழாவாகக் கொண்டாட உத்தரவிட்டவரும், அரசுப் பதிவேட்டில் பாஞ்சாலங்குறிச்சி என்ற பெயரைப் பொறித்தவரும் முதல்வர் கலைஞரே. வீரபாண்டிய கட்டபொம்மன் வாரிசுகளுக்கு வழங்கப்பட்டு வந்த பென்ஷன் 1952 ஆம் ஆண்டு நிறுத்தப்பட்டது. அதனை 1969 ஆம் ஆண்டு திரும்ப வழங்கியவர் முதல்வர் கலைஞர்.**

★ **வ.உ.சி. என்ற பெயருக்கு சிறப்பான விளக்கம் அளித்தவர் கலைஞர் அவர்கள்.**

**வ - வழக்கறிஞர்**

**உ - உரிமைக்காகப் போராடிய,வாதாடிய வழக்கறிஞர்**

**சி - உரிமைக்காக வாதாடிச் சிறை சென்ற வழக்கறிஞர் - என்று விளக்கம் அளித்தார்.**

**கழக ஆட்சியில் 1968 ஆம் ஆண்டு இரண்டாம் உலகத் தமிழ்மாநாடு நடத்தப்பட்டபோது தலைநகர் சென்னையில் வைக்கப்பட்ட பத்துச் சிலைகளில் ஒன்று வ.உ.சிதம்பரனார் சிலை. கோவைச் சிறையில் இருந்தபோது செக்கு இழுக்க வைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டார் வ.உ.சி. அந்த செக்கை நினைவுச் சின்னமாக ஆக்கியவர் முதல்வர் கலைஞர் அவர்கள்.**

1972 ஆம் ஆண்டு வ.உ.சி.யின் நூற்றாண்டு விழாவை நாடு போற்றும் அளவில் மிகச்சிறப்பாகக் கொண்டாடியவர் முதல்வர் கலைஞர். அதே ஆண்டுதான் இந்திய நாடும் தனது 25 ஆவது சுதந்திர தினத்தைக் கொண்டாடியது. இரண்டையும் இணைத்து தூத்துக்குடியில் வ.உ.சிதம்பரனாருக்கு சிலை அமைத்தவர் முதல்வர் கலைஞர்.

★ எட்டையபுரத்தில் பாரதியார் வீட்டை அரசு சார்பில் விலைக்கு வாங்கி அதனை நினைவுச் சின்னம் ஆக்கியவர் முதல்வர் கலைஞர். 12.5.1973 அன்று, அன்றைய அமைச்சர் சி.பா. ஆதித்தனார் தலைமையில் நடந்த விழாவில் திறந்து வைத்தவர் முதல்வர் கலைஞர்.

★ பாரதியாரின் நண்பர் பரலி சு.நெல்லையப்பர் குடும்பத்துக்கு அரசு நிதி உதவி வழங்கியவர் முதல்வர் கலைஞர். இவை அனைத்தையும் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பே செய்து விட்டது கழகம்.

- தொடரும்

●●

அக்.28, 29 தேதிகளில்

## திருவண்ணாமலைக்கு சிறப்புப் பேருந்துகள் இயக்கம்!

சென்னை, அக்.27-

பவுர்ணமியை முன்னிட்டு 28, 29ல் கும்பகோணம் போக்குவரத்துக் கழகம் சார்பில் சிறப்பு பேருந்துகள் இயக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. திருவண்ணாமலை கிரிவலம் செல்லும் பக்தர்களின் வசதிக்காக 150 சிறப்பு பேருந்துகள் இயக்கப்படவுள்ளது.

கும்பகோணம், தஞ்சை, பட்டுக்கோட்டை, திருச்சி, அரியலூர் என பல்வேறு பகுதிகளில் இருந்து பேருந்துகள் இயக்கப்படும். திருவண்ணாமலை, சென்னை தடத்தில் 50 கூடுதல் சிறப்பு பேருந்துகள் இயக்கப்படும் என அறிவித்துள்ளது.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (26.10.2023) முகாம் அலுவலகத்தில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி. பி. கீதாஜீவன் மற்றும் அவரது கணவர் ஜீவன் ஆகியோர் தங்களது மணிவிழாவையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.

நடந்த சம்பவத்தைத் தடுத்து குற்றவாளியை உடனே கைது செய்திருக்கிறோம்!

# ஆளுநர் மாளிகைக்கு பாதுகாப்பில்லை என்பதெல்லாம் மிகத் தவறு!

## ‘எதிரியாக இருந்தாலும் பாதுகாக்கும் தலைவர்தான் நம் முதல்வர்’ என சட்ட அமைச்சர் எஸ்.ரகுபதி பேட்டி!

புதுக்கோட்டை, அக். 27-

“நாங்கள் ஆட்சி செய்கிற மாநிலத்திலேயே பெட்ரோல் குண்டு வீச வேண்டிய அவசியம் எங்களுக்கு கிடையாது. ஆளுநர் மாளிகை முன் நடந்த சம்பவத்தைத் தடுத்து குற்றவாளியை உடனே கைது செய்திருக்கிறோம் என சட்ட அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு அரசு பள்ளி கல்வித்துறை சார்பில் வியாழக்கிழமை புதுக்கோட்டை முதன்மை கல்வி அலுவலர் கூட்ட அரங்கத்தில் நடைபெற்ற மாவட்ட அளவிலான கலை திருவிழா நிகழ்ச்சியில் தமிழக சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி கலந்துகொண்டு, நிகழ்ச்சியை துவங்கிவைத்தார்.

பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்த அவரிடம், ஆளுநர் மாளிகை முன்பு பெட்ரோல் குண்டு வீசப்பட்ட சம்பவத்தில், குற்றவாளியை தப்பவிட்டு விட்டதாக ஆளுநர் மாளிகை எக்ஸ் தள பக்கத்தில் பதிவிடப்பட்டுள்ளது குறித்து கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கு பதிலளித்த அவர், “அவர்கள் எந்த அடிப்படையில் அவ்வாறு கூறுகின்றனர் என்று தெரியவில்லை. குற்றவாளியை காவல்துறை கைது செய்துவிட்டது தொடர்பான செய்தி அனைத்து பத்திரிகை மற்றும் ஊடகங்களில் வந்திருக்கிறது” என்றார்.

**வெறுப்புணர்வை ஆளுநர்தான் பரப்புகிறார்!**

அப்போது, தி.மு.க. மற்றும் அதன் கூட்டணிக் கட்சிகள் தொடர்ந்து ஆளுநருக்கு எதிராக வெறுப்புணர்வை தூண்டுவதால்தான் இதுபோன்ற சம்பவங்கள் நிகழ்வதாக காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்டுள்ள புகார் குறித்து கேள்வி எழுப்பப்பட்டது. அதற்குப் பதிலளித்த அவர், “தமிழ்நாடு மக்கள் மீதும் தமிழ்நாடு அரசின் மீதும் தொடர்ந்து வெறுப்புணர்வை பரப்பிக் கொண்டிருக்கின்ற முதல் நபர் மரியாதைக்குரிய ஆளுநர்தான். எனவே, நாங்கள் எப்போதுமே ஆளுநருக்கு எதிராக வெறுப்புணர்வைப் பரப்பவில்லை.



இதை தொடங்கியது யார்? ஆளுநர்தான். ஊர் ஊருக்குச் சென்று பிரச்சாரம் செய்கிறார். ஒரு கட்சியினுடைய தலைவரைப் போல, எதிர்க்கட்சித் தலைவரைப் போல அவர்தான், பிரச்சாரங்கள் செய்கிறார். ஆனால் ஒன்று, நாங்கள் ஆட்சி செய்கிற இந்த மாநிலத்திலேயே, பெட்ரோல் குண்டு வீச வேண்டிய அவசியம் எங்களுக்கு கிடையாது. இந்தநேரத்தில், சட்டம் ஒழுங்கு பிரச்சினை எல்லாம் வந்துவிட்டதாகக் கூறுவார்கள். எனவே, தி.மு.க.வோ, அதன் தோழமைக் கட்சிகளோ இந்தச் சம்பவத்துக்கு பொறுப்பல்ல.

**ஒருவர் மனநோயாளிபோல செயல்பட்டால் நாங்கள் பொறுப்பா?!**

இது ஒரு சம்பவம். இந்தச் சம்பவத்தை உடனடியாக தடுத்திருக்கிறோம். உடனடியாக சம்பந்தப்பட்ட குற்றவாளியை கைது செய்திருக்கிறோம். அவர் மீது விசாரணை நடைபெறுகிறது. குற்றவாளி சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார். இதில் நாங்கள் எந்தவிதமான தவறும் செய்யவில்லை. எங்காவது மனநோயாளி ஒருவர் இதுபோல வீசி சென்றால், அதற்கு நாங்கள் பொறுப்பாளியாக முடியுமா?” என்றார்.

ஆளுநர் மாளிகைக்கே பாதுகாப்பு இல்லை என்ற குற்றச்சாட்டு குறித்த கேள்விக்கு பதிலளித்த அவர், “ஆளுநர் மாளிகைக்கு எல்லாம் பாதுகாப்பு இல்லை என்று சொல்வதெல்லாம் மிகத் தவறான ஒன்று. இந்தச் சம்பவம் வெளியே நடந்தது. சாலையில் செல்லும் ஒருவர் போகிறபோக்கில் இவ்வாறு தூக்கிப்போட்டுவிட்டு சென்றால், அதற்கு என்ன செய்ய முடியும்? தமிழக முதல்வரின் ஆட்சியில் ஆளுநர் மாளிகைக்கு முழு பாதுகாப்பு கொடுக்கப்பட்டுள்ளது. எனவே, பாதுகாப்பு இல்லை என்று கூறுவது முழுக்க முழுக்க தவறான ஒன்று.

**சட்டம் - ஒழுங்கை அரசு சரியாகப் பாதுகாக்கிறது!**

நாங்கள் ஆளுநர் மாளிகைக்கு பாதுகாப்பு கொடுக்காமல் வேறு என்ன செய்வோம்? அவர்கள் கூறுவது போல், அங்கு பாதுகாப்பு குறைபாடுகள் இருந்தால், சட்டம் ஒழுங்கு சரியில்லை என்று ஆளுநர்தானே புகார் அளிப்பார்? நாங்கள் ஏன் அவ்வாறு செய்யப்போகிறோம்? சட்டம் ஒழுங்கைப் பேணி பாதுகாப்பதில், இந்த அரசு எந்தத் தவறையும் செய்யாது. தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், எதிரியாக இருந்தாலும் அவரை பாதுகாக்கும் தலைவராகத்தான் இருப்பார்.”

இவ்வாறு சட்ட அமைச்சர் எஸ்.ரகுபதி கூறினார்.

திருப்பத்தூர் - ஏலகிரியில் மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பங்கேற்கும்

# கழக மாணவர் அணியின் மூன்று நாள் கருத்தியல் பயிலரங்கம்!

## அமைச்சர் துரைமுருகன் துவக்கி வைக்கிறார்! அமைச்சர் எ.வ.வேலு பரிசு வழங்குகிறார்! மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

சென்னை, அக். 27-

தி.மு.க. மாணவர் அணி சார்பில் மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்களுக்கான மூன்று நாள் கருத்தியல் பயிலரங்கம் திருப்பத்தூர் மாவட்டம் ஏலகிரியில் நடைபெறுகிறது. கருத்தரங்கினை அமைச்சர்கள் துரைமுருகன், எ.வ.வேலு பங்கேற்று துவக்கி வைக்கின்றனர் என மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன் அறிவித்துள்ளார்.

அவரது அறிவிப்பு வருமாறு:-

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் சிந்தனை, சொல், செயல்வடிவமாய் விளங்கும் கழகத்தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின் படி, கழக இளைஞர் அணிச் செயலாளர், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலோடு, திராவிட இயக்கசிந்தனை, கொள்கை, இலட்சியம், கோட்பாடுகள் ஆகிய கருத்தியலில் வலிமை மிக்கவர்களாகவும், இளைய தலைமுறையான மாணவ சமுதாயத்தினரிடம் திராவிட இயக்க சிந்தனை, கொள்கை ஆகியவற்றினை விதைக்கக் கூடியவர்களாக விளங்கிட வேண்டுமென்பதற்காகவும், அரசியலில் களமாடக் கூடிய முன்களப் போர் வீரர்களாய் மாணவர் அணியினர் விளங்கிட வேண்டுமென்று, தி.மு.க. மாணவர் அணியின் மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்களுக்கு மூன்று நாள் கருத்தியல் பயிலரங்கம் நடத்தப் படவுள்ளது.

**பேராசிரியர் சுப.வீரபாண்டியன் - ஆசிரியர் குழுவினர்!**

திராவிட இயக்க கொள்கைகள், லட்சியங்கள், கருத்துகள், இயக்கத்தின் வரலாறு, இயக்க தலைவர்களின் வரலாறு, கழக ஆட்சியில் இயற்றப்பட்ட சமூகநீதி, சமூகவளர்ச்சி, சமூக சீர்த்திருத்தங்கள், சமத்துவத்திற்கான சட்டங்கள், கல்வி, சுகாதாரம், பொருளாதாரம், தொழில் வளர்ச்சி ஆகியவற்றின் வளர்ச்சிக்கான சட்டங்கள், திட்டங்கள், அதனால் தமிழ் சமூகத்தில் ஏற்பட்டுள்ள தாக்கங்கள், அரசியல், பாலினசமத்துவம், எல்லோருக்கும் எல்லாம் என்ற திராவிட மாடல் ஆட்சி முறையின் சாதனைகள் ஆகியவற்றினை குறித்து நன்கு தெரிந்து அரசியலில் களமாட, கருத்தியலில் வலிமை மிக்கவர்களாய் விளங்கிட மூன்று நாள் கருத்தியல் பயிலரங்கம் பயனளிக்கும் என்ற நோக்கத்தில் திராவிட இயக்கத் தமிழர் பேரவை தலைவர் பேராசிரியர் சுப.வீரபாண்டியன் அவர்களோடு இணைந்து பணியாற்றும் ஆசிரியர் குழுவினைக் கொண்டு இக்கருத்தியல் பயிலரங்கம் நடைபெற உள்ளது. இப்பயிலரங்கத்தை தமிழ்நாட்டிலுள்ள கழக மாவட்டங்களின் அடிப்படையில், நான்கு இடங்களில் நடத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

அதன்படி, முதல் பயிலரங்கம் சென்னை வடக்கு, சென்னை வடகிழக்கு, சென்னை மேற்கு, சென்னை தென்மேற்கு, காஞ்சிபுரம் வடக்கு, காஞ்சிபுரம் தெற்கு, திருவள்ளூர் கிழக்கு, திருவள்ளூர் மத்திய, திருவள்ளூர் மேற்கு, இராணிப்பேட்டை, வேலூர், திருப்பத்தூர், திருவண்ணாமலை வடக்கு, திருவண்ணாமலை தெற்கு, கிருஷ்ணகிரி கிழக்கு, கிருஷ்ணகிரி மேற்கு, தருமபுரி கிழக்கு, தருமபுரி மேற்கு ஆகிய 18 மாவட்டங்களின் அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்களுக்கு இன்று 27.10.2023 முதல் 29.10.2023 வரை மூன்று நாட்கள் திருப்பத்தூர் மாவட்டம், ஏலகிரி மலையிலுள்ள ‘ஏ.ஜி.எஸ். ஹாலிடே ரெசார்ட்’, பள்ளகனியூர் சாலை, அத்தனாவூரில், கருத்தியல் பயிலரங்கம் நடைபெறஉள்ளது.

இன்று (27.10.2023) காலை 10.00 மணிக்கு பயிலரங்க தொடக்க விழாவிற்கு, கழகப் பொதுச் செயலாளர், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் வருகைத்தந்து, பயிலரங்கத்தை தொடங்கி வைத்து, வாழ்த்துரை வழங்க உள்ளார். வருகிற 29.10.2023 அன்று பிற்பகல் 03.00 மணியளவில், பயிலரங்க நிறைவு விழாவில் பொதுப்பணி துறை மற்றும் நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர் எ.வ. வேலு வருகைத் தந்து, பயிலரங்கத்தில் பயிற்சிப் பெற்ற மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்களுக்கு நிறைவுப் பரிசு வழங்கி வாழ்த்திட உள்ளார்.

இவ்வாறு கழக மாணவர் அணிச் செயலளர் சி.வி.எம். பி.எழிலரசன் எம்.எல்.ஏ. அறிவித்துள்ளார்.

# வரும் 28, 29ஆம் தேதிகளில் இணையதள சேவை செயல்படாது!

## சென்னை குடிநீர் வாரியம் அறிவிப்பு!

சென்னை, அக். 27 -

குடிநீர் வாரிய டேட்டா சென்டரில் அவசர பராமரிப்பு பணி நடைபெற உள்ளதால், வரும் 28, 29ம் தேதிகளில் இணையதள சேவைகள் அனைத்தும் செயல்படாது என்று சென்னை குடிநீர் வாரியம் அறிவித்துள்ளது.

சென்னை குடிநீர் வாரியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: சென்னைக் குடிநீர் வாரிய சிந்தாதிரிப்பேட்டை தலைமை அலுவலகத் தரவு மையத்தில் (டேட்டா சென்டர்) அவசர பாராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது. இதனால் வரும் 28, 29ம் தேதிகளில் சனி மற்றும் ஞாயிற்று கிழமைகளில் இணையதள வழியாக பெறப்படும் சேவைகளாகிய குடிநீர் மற்றும் கழிவுநீர் வரி செலுத்துதல், புகார்களை பதிவு செய்தல், கட்டணம் செலுத்தி லாரிகள் மூலம் பெறப்படும் குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்ற முன்பதிவு செய்தல் உள்ளிட்ட அனைத்து சேவைகளும் செயல்படாது.

மேலும், குடிநீர் இணைப்பு இல்லாத பகுதிகள் மற்றும் அழுத்தம் குறைவான பகுதிகளுக்கு குடிநீர் தொட்டிகள் மற்றும் தெரு நடைகளுக்கு லாரிகள் மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகம் எந்தவித தடையுமின்றி வழக்கம்போல் சீரான முறையில் மேற்கொள்ளப்படும். நிர்ணயிக்கப்பட்ட கால அளவிற்குள் பாராமரிப்பு பணிகள் முடிக்கப்பட்டு வரும் 30ம்தேதி காலை 9 மணி முதல் வழக்கம் போல் இணையதள சேவைகள் அனைத்தும் செயல்படும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



திருவண்ணாமலையில் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் வெற்றி பெற்ற அணிகளுக்கு கழக மருத்துவ அணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன் கோப்பைகள் வழங்கினார். உடன் இரா.ஸ்ரீதரன், ப்ரியா விஜயரங்கன், ப.கார்த்திவேல்மாறன், டி.வி.எம்.நேரு மற்றும் கு.கணேஷ், பாலமுரளிகிருஷ்ணா, எம்.வெங்கடேஷ், ஒருங்கிணைப்பாளர் சபரி, பி.ஜி.விக்கிமுருகன், தயா உட்பட பலர் உள்ளனர்.